

அரசு நிகழ்ச்சிகளில் பங்கேற்பதற்காக சேலம் மாவட்டத்திற்கு வருகை தந்த தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களை சேலம் காமலாபுரம் விமான நிலையத்தில் நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு நேற்று முன்தினம் (10.06.2023) வரவேற்றார். உடன் வேளாண்மை உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம், மாநகராட்சி மேயர் ஆ.இராமச்சந்திரன், மாவட்ட ஆட்சித் தலைவர் செ.கார்மேகம் உள்ளிட்டோர் உள்ளனர்.



சேலம் மாநகருக்கு வருகை தந்த முதல்வர் – தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு கழகத்தினர் திரண்டு நின்று உற்சாக வரவேற்பு அளித்த காட்சி.







முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் கனவுத்திட்டமான 'நான் முதல்வன்' திட்டத்தின் கீழ் திறன் பயிற்சி பெற்ற கலை – அறிவியல் கல்லூரி மாணவர்களுக்கான வேலைவாய்ப்பு முகாம்களில் வென்ற 1425 பேருக்கு சென்னை பல்கலைக்கழகத்தில் பணி நியமன கடிதங்களை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் வழங்கி சிறப்புரையாற்றினார்.





பேறிஞர் அண்ணா சதுக்கத்தில் கலைஞர் நூற்றாண்டு விழா நினைவுப் பேருந்து நிலையம் மத்திய சென்னை எம்.பி. தொகுதி மேம்பாட்டு நிதி ரூ.1.20 கோடி மதிப்பில் கட்டப்பட்டதை இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் திறந்து வைத்தார். உடன் அமைச்சர்கள் மா.சுப்பிரமணியன், பி.கே.சேகர்பாபு, தயாநிதி மாறன் எம்.பி., மேயர் பிரியா ராஜன், துணை மேயர் மு.மகேஷ்குமார், நே.சிற்றரசு உள்ளிட்டோர் உடனுள்ளனர்.




வேளச்சேரி நீச்சல் குளம் வளாகத்தில் தரம் உயர்த்தப்பட்ட ஜிம்னாஸ்டிக்ஸ் அரங்கம் மற்றும் கூடுதல் மேம்பாட்டு வசதிகளை இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (10.06. 2023) திறந்து வைத்தார். இதனை தொடர்ந்து நடைபெற்ற ஜிம்னாஸ்டி க்ஸ் மாணவ, மாணவியர்களின் சாகச நிகழ்ச்சிகளை அமைச்சர் பெருமக்கள் மற்றும் சிறப்பு விருந்தினர்கள் கண்டுகளித்தனர். இந்த நிகழ்ச்சியில், அமைச்சர் மா. சுப்பிரமணியன், எஸ்.அரவிந்த்ரமேஷ், துணை மேயர் மு.மகேஷ்குமார், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர். அதுல்ய மிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ. மேகநாத ரெட்டி, மண்டல குழுத் தலைவர்கள் இரா.துரைராஜ், பெருங்குடி எஸ்.வி.ரவிச்சந்திரன் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.



தென் கொரியாவின் யெச்சியோனில் நடைபெற்ற 20 வயதுக்குட்பட்டோருக்கான 20 ஆவது ஆசிய தடகளப்போட்டிகளில், இந்தியா சார்பில் பங்கேற்று ஒரு தங்கம், ஒரு வெள்ளி, 2 வெண்கல பதக்கங்களை வென்ற தமிழ்நாட்டைச் சேர்ந்த கனிஸ்தா டீனா, சரண் மேகவர்ணம், அக்ஷயா, அபிநயா ஆகியோர் நேற்று தமிழ்நாடு விளையாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களிடம் வாழ்த்துப் பெற்றனர்.

## தென்கொரியாவில் நடைபெற்ற 'ஆசிய சாம்பியன்ஷிப் 2023' போட்டிகளில்

# பதக்கங்கள் வென்ற 4 தடகள வீரர்கள்-அமைச்சர் உதயநிதி ஸ்டாலினிடம் வாழ்த்துப் பெற்றனர்!

*சென்னை, ஜூன் 12*

தென்கொரியாவில் 2023 ஜூன் 4ந் தேதி முதல் 7 ந்தேதி வரை 20 வயதுக்கு உட்பட்டோருக்கான "ஆசிய தடகள சாம்பியன்ஷிப் - 2023" போட்டிகள் நடைபெற்றது. இந்தப் போட்டிகளில் இந்திய தடகள வீரர்கள் 19 பதக்கங்கள் வென்றனர்.

இதில் இந்தியா சார்பில் கலந்து கொண்ட தமிழ்நாட்டை சார்ந்த 4 தடகள வீரர்கள் பதக்கங்கள் வென்று சாதனை படைத்தனர். 4 × 400 மீ தொடர் ஓட்டத்தில் எம்.கனிஸ்டா டீனா (பெண்கள் பிரிவு) தங்கப்பதக்கமும், எம். சரண் மேகவர்ணம் (ஆண்கள் பிரிவு) வெள்ளிப் பதக்கமும், 4×100மீ தொடர் ஓட்டத்தில் (பெண்கள் பிரிவு) ஆர். அபிநயா மற்றும் எஸ். அக்சயா ஆகியோர் வெண்கலப் பதக்கமும் வென்றனர்.

இந்திய சார்பாக பங்கேற்று பதக்கங்கள் வென்று தமிழ்நாட்டிற்கு பெருமை சேர்த்த 4 தடகள வீரர்களும் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (10.06.2023) சென்னை முகாம் அலுவலகத்தில் சந்தித்து வாழ்த்து பெற்றனர்.

இந்நிகழ்ச்சியில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல்ய மிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ. மேகநாத ரெட்டி, தமிழ்நாடு தடகள சங்க செயலாளர் லதா மற்றும் பயிற்சியாளர்கள் உடனிருந்தனர்.

# பள்ளிகள் தாமதமாகத் திறக்கப்படுவதால் - சனிக்கிழமைகளிலும் வகுப்புகள்!

## அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி அறிவிப்பு!

*சென்னை, ஜூன் 12*

பள்ளிகள் தாமதமாக திறக்கப்படுவதால் சனிக்கிழமைகளிலும் வகுப்புகளை நடத்ததிட்டமிட்டிருப்பதாக அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி தெரிவித்துள்ளார். தமிழ்நாட்டில் மே மாத கோடை விடுமுறை முடிந்த பிறகு ஜூன் 1-ஆம் தேதி பள்ளிகள் திறக்கப்படும் என முதலில் அறிவிக்கப்பட்டது. ஆனால் வெயில் சுட்டெரித்த தால் இதைத் தள்ளி வைக்க வேண்டும் என பல்வேறு தரப்பினரும் கோரிக்கை விடுத்தனர்.

இதையேற்று ஜூன் 7-ஆம் தேதி பள்ளிகள் திறக்கப்படும் என அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி அறிவித்தார். அதன் பிறகும் வெயில் நீடித்தது.

இதையடுத்து முதல்வர் மு.க.ஸ்டாலினுடன் அமைச்சர் ஆலோசனை நடத்தி புதிய அறிவிப்பை வெளியிட்டார். அதன்படி 6 முதல் 12-ஆம் வகுப்பு வரையிலான



மாணவர்களுக்கு ஜூன் 12-ஆம் தேதியும், 1 முதல் 5-ஆம் வகுப்பு மாணவர்களுக்கு ஜூன் 14-ஆம் தேதியும் பள்ளிகள் திறக்கப்படும் என அமைச்சர் அறிவித்தார்.

ஆகவே விரைவில் பள்ளிகள் திறக்கப்படுகின்றன. ஆனால் அதிக விடுமுறை விடப்பட்டதால் பாடங்களை முடிக்க போதிய அவகாசம் இருக்காது. ஆகவே சனிக்கிழமைகளிலும் வகுப்புகளை நடத்த திட்டமிடப்பட்டுள்ளது.

இது தொடர்பாக சென்னையில் பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி நிருபர்களிடம் கூறியதாவது:-

பள்ளி மாணவர்களுக்கான தேசிய அளவிலான விளையாட்டுப் போட்டியில் தமிழக மாணவர்கள் கலந்து கொள்ளாதது தவறுதான். அந்த தவறை ஒப்புக்கொள்கிறோம். முறையான தகவல் பரிமாற்றம் இல்லாததன் காரணமாகவே மாணவர்கள் தேசிய அளவிலான விளையாட்டுப் போட்டிகளில் கலந்துகொள்ளாத சூழல் உருவாகி உள்ளது.

தவறு செய்த உடற்கல்வியல் ஆய்வாளர் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மேலும், இணை இயக்குநர் ஒருவருக்கும், அது சார்ந்த விளக்கம் கேட்கப்பட்டுள்ளது. வரும் ஆண்டில் நடைபெற உள்ள தேசிய அளவிலான பள்ளி மாணவர்களுக்கான விளையாட்டு போட்டியில் தமிழக மாணவர்கள் நிச்சயம் கலந்துகொள்வதற்கான ஏற்பாடுகள் செய்யப்படும்.

கோடை விடுமுறைக்கு பின் பள்ளிகள் தாமதமாக திறக்கப்படுவதால் வரும் கல்வி ஆண்டில் ஒரு பாடத்திற்கு நான்கு மணி நேர பற்றாக்குறை ஏற்படும் நிலை உள்ளது. பாட வகுப்புகள் நடத்துவதற்கான பற்றாக்குறையை போக்குவதற்கு சனிக்கிழமைகளில் பாட வகுப்புகள் நடத்த திட்டமிட்டுள்ளோம்.

மாணவர்களுக்கு பாடச்சுமைகள் இல்லாதவாறும், ஆசிரியர்களுக்கு பயிற்சியில் பாதிப்பு ஏற்படாத வாறும் மாணவர்களுக்கு சனிக்கிழமை வகுப்புகள் எடுக்கப்படும்.

இவ்வாறு அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி கூறினார்.